தமிழ்நாடு அரசு

**சிறுபான்மையினர் நல இயக்ககம்**

807, 5வது தளம், அண்ணாசாலை, சென்னை– 600 002

# சிறுபான்மையின மாணவ–மாணவியர்களுக்கு பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை வழங்குதல் 2018-19 (Prematric Scholarship)

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் மைய / மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் மைய அரசால் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர் புத்தமதத்தினர் பார்சி மற்றும் ஜெயின் மதத்தை சார்ந்த மாணவ/ மாணவியர்களுக்கு 2018-19 ஆம் ஆண்டிற்கு பள்ளிபடிப்பு கல்வி உதவித்தொகை (புதியது மற்றும் புதுப்பித்தல்) பெற விண்ணப்பங்கள் மத்திய அரசின் www.scholarships.gov.in என்ற தேசிய கல்வி உதவித்தொகை இணைய தளத்தில் ஆன்லைன் (Online) மூலம் வரவேற்கப்படுகின்றன. தமிழ்நாட்டிற்கு 2011 ஆம் ஆண்டிற்கான மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 2018-19 ஆம் ஆண்டிற்கு மதவாரியான பள்ளி படிப்பு கல்வி உதவித்தொகை (புதியது=Fresh) க்கான தோராய இலக்கீடு பின்வருமாறு:

| இஸ்லாமியர் | கிறித்துவர் | சீக்கியர் | பௌத்தர் | ஜெயின் | பார்சி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 54259 | 56682 | 187 | 144 | 1145 | 2 | 112419 |

புதிய விண்ணப்பங்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை வரையறுக்கப்பட்ட / நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையில் மட்டுமே வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் (குறைந்த வருமானம் உள்ளவர்கள் ஏறுவரிசையில்) மற்றும் அதிக மதிப்பெண்கள் அடிப்படையில் மத்திய அரசால் தேர்வு செய்யப்படுவர். இதில் 30% மாணவியருக்கு ஒதுக்கீடு செயய்யப்பட்டுள்ளது. **கல்வி உதவித்தொகை புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு இலக்கு ஏதும் வரையறுக்கப்படவில்லை.**

**விண்ணப்பிக்கும் தகுதி :**

| புதியது (Fresh) | புதுப்பித்தல் (Renewal ) |
|---|---|
| ➢ முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) **50%** மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்<br>➢ பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் **ஒரு இலட்சத்திற்கு மிகாமல்** இருத்தல் வேண்டும். | ➢ இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை (புதியது) பெற்றிருக்கும்பட்சத்தில் முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் **50 %** மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்<br>➢ பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் **ஒரு இலட்சத்திற்கு மிகாமல்** இருத்தல் வேண்டும். |

## கல்வி உதவித்தொகை விவரம்

| வகுப்பு | சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணம் | பராமரிப்புக் கட்டணம்(10 மாதங்களுக்கு மட்டும்) |
|---|---|---|
| 1முதல் 5ம் வகுப்புவரை | - | விடுதியில்தங்குபவர்களுக்கு ரூ.600 வீதம்<br>விடுதியில் தங்காதவர்களுக்கு ரூ 100 வீதம் |
| 6 முதல் 10ம் வகுப்பு வரை | ரூ. 500 + 3500 | |

**இதர நிபந்தணைகள்:-**

- குடும்பத்தில் அதிக பட்சம் இரு குழந்தைகளுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.
- கல்வி நிலையத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவீடுகளின்படி மாணவ மாணவியர்கள் தொடர்ச்சியாக பள்ளிக்கு வருகை புரிதல் வேண்டும்.
- பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை / ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் இதர துறைகள், நலவாரியங்கள் மூலம் கல்வி உதவித்தொகை விண்ணப்பித்திருந்தாலும் ஏதேனும் ஒரு திட்டத்தில் மட்டுமே கல்வி உதவித்தொகை பெற முடியும்.
- இத்திட்டத்தில் மாணவ / மாணவியர்கள் (www.scholarships.gov.in ) என்ற இணைய தளத்தின் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- மேற்காணும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் கல்வி உதவித்தொகை வழங்குவது ஒத்தி வைக்கப்படும் அல்லது நிராகரிக்கப்படும்.
- தவறான ஆவணங்கள்/ தகவல்களின் அடிப்படையில் கல்வி உதவித்தொகை பெறுவதாக தெரியவந்தால், கல்வி உதவித்தொகை வழங்குவது முற்றிலுமாக நிறுத்தப்பட்டு, ஏற்கனவே வழங்கப்பட்ட உதவித்தொகை ஒரே தவணையில் மீள வசூலிக்கப்படும்.

| பள்ளி படிப்பு கல்வித் தொகைக்கு மாணவ மாணவியர்கள் www.scholarships.gov.in என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் | **புதியது** | **புதுப்பித்தல்** |
|---|---|---|
| | **30.09.2018** | |

**இணைய தளத்தில் விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள் / விவரங்கள்**

| | |
|---|---|
| i. மாணவ மாணவியரின் புகைப்படம்<br>ii. கைபேசி எண் (Mobile Number) / மின்னஞ்சல் முகவரி (E-mail) (அதிக பட்சமாக இரு விண்ணப்பங்களுக்கு மட்டும்)<br>iii. மதிப்பெண் பட்டியல் (முந்தைய ஆண்டு தேர்வுகளில் குறைந்த பட்சம் 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்)<br>iv. ஆதார் எண் (கட்டாயமில்லை) எனினும் ஆதார் விண்ணப்பித்ததற்கான ரசீது, புகைப்படத்துடன் கூடிய வங்கி புத்தகம், குடும்ப அட்டை, PAN Card, Pass port, கல்வி நிலையங்களில் அளித்த அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம் இவற்றில் ஏதேனும் ஒன்று சமர்ப்பிக்கலாம். ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கு இருப்பின் பதிவு செய்யலாம்.<br>v. செயல்நிலையில் உள்ள மாணவ மாணவியர் பெற்றோர்/பாதுகாவலா வங்கி கணக்கு (புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகம்.) | vi) பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமான சான்றிதழ் வருவாய் வட்டாட்சியரிடமிருந்து மட்டுமே பெற்று கல்வி நிலையத்தில் தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.<br>vii) மதம்/சாதிக்கான சான்றிதழ் வருவாய்த்துறை வட்டாட்சியரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் அல்லது சுயசான்றொப்பமிடப்பட்ட (Self Declaration) ரூ.10. நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள் உறுதிமொழி படிவம்* (*http://www.minorityaffairs.gov.in/ என்ற இணைய தளத்தில் (SCHEMES/PERFORMANCE >Scholarship-Schemes >pre-matric-scholarship-scheme) உள்ள படிவத்தில்* )<br>viii)இருப்பிட / உறைவிட சான்றிதழ் |

**குறிப்பு விண்ணப்படிவம் மற்றும் ஆவணங்கள்பள்ளியின்பாதுகாப்பில் இருத்தல்வேண்டும். இவை தணிக்கையின்போது தணிக்கை குழுவினர் கோரும்போது காண்பிக்கப்படவேண்டும்.**

**விண்ணப்பிக்கும் முறை:**

**1)கல்வி உதவித்தொகை– புதியது :** புதிய மாணவ / மாணவியர் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் New User? Register என்பதை தெரிவு செய்து முதன்மை விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

2)மாணவ மாணவியர்களால் பதிவு செய்யப்பட்ட கைபேசி (Mobile) எண் இணைய தளத்தால் சரிபார்க்கப்பட்ட பின்னர் மட்டுமே விண்ணப்பம் செய்ய அனுமதிக்கப்படும். பதிவுசெய்யப்பட்ட கைபேசி எண்ணில் மட்டுமே சில முக்கிய தகவல்கள் மாணவ/மாணவிகளுக்கு அனுப்பப்படும்.எக்காரணத்தை முன்னிட்டும் இந்த அலைபேசி எண்ணை மாற்றக்கூடாது.

**3) கல்வி உதவித்தொகை– புதுப்பித்தல்:** கல்வி பயிலும் பள்ளி மாறாமல் கடந்த ஆண்டில் சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகை பெற்றுவரும் மாணவ மாணவியர்கள் மட்டுமே புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்களாக கருதப்படுவர். புதுபித்தலுக்கு விண்ணப்பிக்கும்போது கடந்த ஆண்டு கல்வி உதவித்தொகை (புதியது)-க்கு பெறப்பட்ட விண்ணப்ப எண்ணை (Application ID) கொண்டே விண்ணப்பிக்கவேண்டும்.

4.புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்கும் மாணவ மாணவியர்கள் கல்வி பயிலும் பள்ளிகளை மாற்ற இயலாது.

5.இணைய தளத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் விடுபடாமல் பூர்த்தி செய்து விண்ணப்பத்தை படியிறக்கம் செய்து அதனுடன் மாணவ/மாணவியரது புகைப்படம், தேவையான அனைத்து ஆவணங்களின் நகல்களை இணைத்து குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கல்வி நிலையத்தில் விண்ணப்பத்தை பரிசீலனை செய்வதற்கு தவறாது சமர்பிக்க வேண்டும். தவறினால் அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்க இயலாது. **பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் எந்த நிலையிலும் மாற்றவோ திருத்தவோ இயலாது.**

**கல்வி நிலையங்களின் கவனத்திற்கு**

அனைத்து கல்வி நிறுவனங்கள்/பள்ளிகள் தங்களது பெயர், முகவரி, பதிவு எண், கல்வித்துறையுடன் இணைத்தல், தொலைபேசி எண் மற்றும் இமெயில் முகவரி மற்றும் பாடப்பிரிவுகளின் அங்கீகாரம், ஆண்டு கல்விக்கட்டணம், ஏனைய தகவல்களை NSP (National Scholarship Portal- www.scholarships.gov.in)- ல் **15.08.18** –க்குள் தவறாது பதிவு செய்ய வேண்டும். பின்னர் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொண்டு தங்களுக்கான பயனாளர் குறியீட்டு (Login / password) விவரங்களை உடனடியாக பெற்றுகொள்ள வேண்டும National Scholarship Portal இணைய தளத்தில் புதிய கல்வி நிலையங்களை இணைப்பதற்கு DISE / AISHE குறியீட்டு எண் அவசியமாகும்.

2)NSP இணைய தளத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கல்வி நிலையங்களின் தொலைபேசி எண்கள் அல்லது வகுப்புகளில் மாற்றம் இருப்பின் உடன் திருத்தம் செய்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

3)**கல்வி நிலையங்கள் சரியான** DISC/AICHE **குறியீட்டு எண்ணை மாணவ மாணவியர்களுக்கு தெரிவிக்கவும், அறிவிப்பு பலகையில் குறிப்பிடவேண்டியது கல்வி நிலையங்களின் கடமையாகும்.**

**4)இத்திட்டத்தின்கீழ் ஆன்லைன் மூலம் பதிவுச்செய்யப்படும் விண்ணப்பப்படிவங்களை மேற்படி ஆவணங்களுடன் பரிசீலித்து தகுதியின் அடிப்படையில் ஆன்லைன் மூலமாக அடுத்த நிலை அலுவலருக்கு (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு) உரிய காலத்திற்குள் தவறாது பரிந்துரைத்தல் வேண்டும்.**

மேலும் விவரங்களுக்கு தொடர்புடைய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகர் ,மாவட்ட ஆட்சித்தலைவர அலுவலகம் அணுகலாம், http://www.minorityaffairs.gov.in/ மற்றும் http://scholarships.gov.in/ என்ற இணைய தள முகவரிகளை பார்க்கவும்.

**நாள்** 27,07,2018 **சிறுபான்மையினர் நல இயக்குநர்**